Registered as a Newspaper

பக்கங்கள்: நான்கு

உதயன்

விலை ரூபா 5-00

கூர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 13 செவ்வாய்க்கிழமை (27 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 212

பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, நிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[பி-9729]

கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, நிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[பி-9729]

மட்டக்களப்பில் சோதனை மினி முகாம் புலிகளின் அதிரடி தாக்குதலில் தகர்ப்பு

மட்டக்களப்பில் ஆட்கடத்தும் மோட்டார் சைக்கிள் படையணி!

பிடித்துச் செல்வோர் மீது கொடூர சித்திரவதை

கொழும்பு, ஜூன் 27

இரவு வேளைகளில் தமிழர்களைக் கைது செய்வதற்கென மட்டக்களப்பில் "மோட்டார் சைக்கிள் படையணி" ஒன்று இயங்கி வருகிறது.

இந்தப் படையணி பிடித்துச் செல்வோரில் பலர் காணமற் போகின்றனர். விடுவிக்கப்படும் ஒரு சிலரும் மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே வீடு செல்ல அனுமதிக்கப் படுகின்றனர்.

"மோட்டார் சைக்கிள் படையணி" பொழுது கருகியதும் தனது தமிழர் வேட்டையை ஆரம்பிக்கிறது. அதன் காரணமாக மட்டக்களப்பு நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மாலை 6 மணிக்கும் பின்னரே மயான அமைதி நிலவுகிறது.

நான்கு மூன்று மோட்டார் சைக்கிள்களில் திடீரென வரும் இந்தப் படையணியினர் கண்ணில் படுவோரை மறித்து மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிக் கொண்டு பறந்து விடுகின்றனர்.

வீதிகளில் எவரும் அகப்படாவிடில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

8 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதி பாலத்தடியில் இருந்த இராணுவத்தினரின் சோதனை மினி முகாம் ஒன்றை நேற்று அதிகாலை 12.45 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் மூலம் கைப்பற்றி, எரித்து நிர்மூலமாக்கினர். இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

முப்பது நிமிட நேரத்தாக்குதலில் எட்டுப் படையினர் அந்த இடத்திலேயே உயிரிழக்க, எஞ்சிய படையினர் மக்கள் குடியிருப்புக்குள் தப்பி ஓடினர். முகாம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அடுத்து, புலிகள் அதனை எரித்து நிர்மூலமாக்கினர்.

இந்த மினி முகாமிலிருந்த இராணுவத்தினர் இப்பாலத்தாக் செல்லும் தமிழர்களை சோதனை என்ற பெயரில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-4]

கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

மட்டக்களப்பு காயங்கேணி பகுதியில் நேற்று நடத்திய சோதனை மினி முகாம் மீதான தாக்குதலில் படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கிகள்	—	02
★ ஆர்.பி.ஜி	—	01
★ ஜி- 56 இரண்டு ரகத் துப்பாக்கிகள்	—	03
★ ஜி- 56 ஒன்று ரகத் துப்பாக்கிகள்	—	02
★ ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கி நம்பரவைக் கூடுகள்	—	18
★ ஆர்.பி.ஜி எறிகணைகள்	—	07
★ ஆர்.பி.ஜி புறொப்பலர்கள்	—	05
★ ஏ.கே. ரவைக் கூடு	—	21
★ குண்டு துளைக்காத கவசங்கள்	—	09
★ ஏ.கே. ரவைக் கூடு தாங்கி அணிகள்	—	05
★ விநியோகத் தாங்கி அணிகள்	—	05
★ கிளைமோர்	—	04
★ கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி	—	02
★ பதிவு செய்யும் சாதனம்	—	01
★ நடுத்தர ரவைகள்	—	3,500
★ சப்பாத்து	—	5சோடி

மேற்படி குழுவினர் தமக்கு எதிரான வர்களைக் கடத்திச் சென்று கொலை செய்து சடலங்களை ஆற்றில் போடுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பாணந்துறை பொலீஸ்பிரிவில் உள்ள பொக் கொட வாகியில் இருந்து மீட்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரசு

...அப்ப ஐ.தே.க. காலத்திலை "வெள்ளை வான்" அம்மையாரின் காலத்திலை "மோட்டார் சைக்கிள்" என்டு சொல்லுங்கோ...!

அனுருத்த மீது நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, ஜூன் 27

பாதுகாப்பு பிரதி அமைச்சர் சேனக அனுருத்தரத்வத்தைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினர் முயற்சித்து வருவதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று குறிப்பிட்டது.

(உ)

புலிகள் பலவீனப்படுத்தப்பட்டால் தமிழ் இனம் முழுவதற்கும் பாதிப்பு

குமார் பொன்னம்பலம் பேட்டி

கொழும்பு, ஜூன் 27

விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டால் அது தமிழ் இனம் முழுவதும் பலவீனப்படுத்தப்பட்டதற்குச் சமனாகும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நடந்து கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போர் வேறு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் வேறு — என்று இரண்டையும் பிரித்துக் கூற முடியாது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் இன விடுதலைப்போர் தனித்துவமானதாகும்.

இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாவிட்டாலும் காட்டிக் கொடுக்காமல் இருந்தாலே நல்லது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

மர்மக் கொலைகளின் பின்னால் தமிழ்க் குழு?

கொழும்பு, ஜூன் 27

இளைஞர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டு ஆற்றில் வீசப்படும் சம்பவங்களுக்குப் பின்னணியில் கொழும்பில் இயங்கி வரும் ஆயுதம் தாங்கிய தமிழ் அரசியற் குழு ஒன்று செயற்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது

மேற்படி குழுவினர் தமக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

தடை செய்யப்பட்ட அமைப்பாக புலிகளை அறிவிக்க அரசு முயற்சி!

சட்டச் சிக்கல்களை ஆராய்கிறதாம்

கொழும்பு, ஜூன் 27

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோதமான அமைப்பு எனப் பிரகடனப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தலைவர்கள் ஆலோசித்து வருவதாக கொழும்புத் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

நாடு முழுவதிலுமான அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத வேளையில், ஏதேனும் ஓர் இயக்கத்தை சட்டவிரோத அமைப்பாகப் பிரகடனப்படுத்துவது இயலாத காரியம் என்பதாக் தமது திட்டத்தைச் செயற்படுத்துவதில் அவர்களுக்கு நெருக்கடி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போது வடக்கு - கிழக்கிலும், அதன் சில எல்லைப் புறப் பிரதேசங்களிலும், தலைநகர் கொழும்பிலும், கொழும்பு பொருளாதாரப் பெரும் பிரதேசத்திலும் மட்டுமே அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளது என்பது தெரிந்ததே.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என இரு தேசங்கள் இருப்பதை சந்திரிகா புரிந்து கொள்ளாததால் இந்நிலை

முன்னாள் ரூபவாஹினித் தலைவர் வசந்தராஜா விளக்குகிறார்

கொழும்பு, ஜூன் 27

"தமிழ் தேசம் வேறு; சிங்கள தேசம் வேறு. இந்த சரித்திர உண்மையை முன்னைய தலைமையை போக் சந்திரிகாவின் தலைமையும் சரிவரப் புரிந்து கொள்ளாத தவறியதே இன்றைய நிலைக்குக் காரணமாகும்."

"ரூபவாஹினி" கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் எம். வசந்தராஜா, அரசு சார்புப் பத்திரிகையான "த சண்டே ஒப்சேவர்" ஆங்கில வார இதழில் எழுதிய தமது கண்ணோட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தக் கட்டுரையில் வலியுத்தப்பட்ட கருத்துக்கள் "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை ஆசிரியரின் கருத்துக்களைப் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல" என்ற அடிக் குறிப்புடன் பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரையில் —

அரசு — புலிகள் பேச்சு முறிவடைவதற்கு அரசின் கபடத் தனமான போக்கே காரணம் என்பது விலாவாரியாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

"அரசின் சமாதான முயற்சியில் எதிரே பிழை ஏற்பட்டது" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இக்கட்டுரையில் —

[4 ஆம் பக்கம் பார்க்க]

★ யாழ். மீது அரசு தாக்குதல் தொடுத்தால்

தொடர் குண்டு வெடிப்புகளை கொழும்பில் புலிகள் நடத்துவர்

புலனாய்வு பிரிவு அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 27

யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தாக்குதல் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு அரசு முயற்சித்தால் கொழும்பிலும் ஏனைய முக்கிய நகரங்களிலும் தொடர் குண்டு வெடிப்புகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்வர்.

— இவ்வாறு புலனாய்வு அறிக்கைகள் அரசை எச்சரித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவம் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போதெல்லாம் இத்தகைய — கவனத்தைத் திசை திருப்பும் உத்தியை — விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் மேற்கொண்டு வந்ததை அப்பத்திரிகை சுட்டிக்காட்டியது.

(ஐ-உ)

"ஜிகாத்" இயக்கம் மீண்டும் தமிழர் விரோத நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பில் "ஜிகாத் இயக்கம்" புதுத்துயிர் பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் ஐ.தே.கட்சி அமைத்த ஊர்காவல் படைகளில் பணிபுரிந்து இப்போது தொழில் இல்லாமல் இருக்கும் முஸ்லிம் இளைஞர் சிலர் சேர்ந்து "ஜிகாத் இயக்கம்" என்ற அமைப்புக்குப் புத்துயிர் கொடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் தமிழர்களின் வீடு

[4 ஆம் பக்கம் பார்க்க]

கிழக்கில் விமானம் மீது புலிகள் நேற்று தாக்குதல்?

மணிலா, ஜூன் 27

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் வைத்து படையினருக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தினர் என்று இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெரிதாஸ் வானொலி அறிவித்தது.

ஆனால் இச்சம்பவம் பற்றி மேலதிக விவரம் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இவ்விமானத்தில் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் பயணம் செய்ததாகவும்—

விமானத்தின் மீது சுடப்பட்டவேளையில் அவர் காயமடைந்து பின்னர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் வெரிதாஸ் வானொலி குறிப்பிட்டது.

(உ-ஐ-4)

அடிஸ் அபாபாவில் கொலைமுயற்சி

எகிப்து அதிபர் முபாரக் மயிரிழையில் தப்பினார்!

அடிஸ்அபாபா, ஜூன் 27

எதியோப்பிய தலைநகர் அடிஸ்அபாபாவில் வைத்து மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியில் இருந்து எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் நேற்று மயிரிழையில் உயிர் தப்பினார்.

எதியோப்பியாவில் நடைபெறவுள்ள ஆபிரிக்க மேல்நிலை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்ற சிறிது நேரத்தில் இக்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அடிஸ்அபாபா விமான நிலையத்தை விட்டு அவர் பயணம் செய்த வாகனம் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென [illegible] நடத்தப்பட்டது.

— சாமர்த்தியமான வேட்டுக்கள் முபாரக் பயணம் செய்த காரைத் தாக்கின. எனினும் கிறிஸ்டவசமாக அவர் காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கில் மக்களை பாதுகாக்க பிரதேச பாதுகாப்பு படைகளை அமைக்க கோருகிறார் அஷ்ரப்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களைப் பாதுகாப்பதற்கு பிரதேச பாதுகாப்புப் படை ஒன்றைத் திரட்டுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததை அடுத்து யுத்தம் ஆரம்பித்துள்ளது.

யுத்தம் வேறு, பாதுகாப்பு என்பது வேறு. இந்த இரண்டையும் படையினர் செய்ய முடியாது. யுத்தத்தில் கவனம் செலுத்துவதை விட்டு புலிகளின் அச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ள பகுதிகளில் மக்களைப் பாதுகாக்க படையினர் செய்யமுடியாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆடைத் தொழிற்சாலைகள் அம்பாறையில் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 27

அம்பாறை மாவட்டத்தில் புதுக்கோயில், அக்கரைப்பற்றுப் பகுதிகளில் இயங்கிய ஆடைத் தொழிற்சாலைகள் இரண்டு நேற்று முன்தினம் திடீரென மூடப்பட்டுள்ளன.

இதனால் இந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த நூற்றுக்கணக்கான தமிழ் யுவதிகள் வேலை இழந்துள்ளனர்.

நட்டத்தில் இயங்கியதால் இந்தத் தொழிற்சாலைகள்

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சோக்கேஸ், பின்னல் செற்றி, குசன்செற்றி, கதிரை மேசை, றெசிங் ரேபிள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (37234)

முட்டை இடுகின்ற வார் பேட்டுக்கோழிகள், சிக்கிக் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 54/6, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (பாண்டியன்தாழ்வு அன்னம்மாள் ஆலய முன் ஒழுங்கை, (37246)

தேவை

ஆன்ட்றீஸ் நிறுவனத்திற்கு 100 K. V. A. டைனமோ எஞ்சினுடன் தேவை. தனியடைனமோ விற்பனைக்கு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். ஆன்ட்றீஸ் நிறுவனம், கண்டி வீதி, நாவற்குழி. [37226]

ரேடியோ T. V. ஆன்ரனா உதிரிப்பாகங்கள் மற்றும் வீட்டு மரத்தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (37233)

ஆறிகில லைத்தியசாலைக்கு பயிலுநர் தாதிமார் தேவை. முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும் மேற்பார்த்து இல. 972, உதயன், யாழ்ப்பாணம். [8603]

புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் தேர்வுக்கான வினாப்பத்திரம் 1, வினாப்பத்திரம் 2க்குரிய பொதுவிவேகம், பொதறிவு வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [37173]

வீடு தேவை

மூன்று ஆட்கள் மாத்திரம் கொண்ட பொறியியலாளர் [Engineer] குடும்பம் தங்குவதற்கு வீடு அல்லது பகுதிவீடு யாழ்நகரில் அல்லது அதன் சுற்றாடலில் தேவை. நேரில் அல்லதுகடிதமூலம் தொடர்பு கொள்ளவும். K. கிருஷ்ணசாமி, 426/1, கில்னர் ஒழுங்கை (பாரதி ஒழுங்கை), யாழ்ப்பாணம். [8604]

SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T.V. Antenna, Repairing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (C-1490)

ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்கள் 24ஆவது சுற்றுக்குரிய மண்எண்ணெய எதிர்வரும் 30 ஆம்திகதிக்கு முதல் பெற்றுக் கொள்ளுமாறும்—

கடந்த 21ஆம் திகதி முதல் நடைபெற்றுவரும் 26பி, 27ஏ ஆகிய வற்றுக்குரிய உலர் உணவு விநியோகத்தை எதிர்வரும் 28ஆம்திகதிக்கு முதல் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் சங்க பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-14)

தமிழுக்கு
புது
அறுவடை தந்த

டொமினிக் ஜீவா

அவர்களின்

பிறந்த தினம்

இன்று

எனது
இதய பூர்வமான
வாழ்த்துக்கள்

சி. குலேந்திரன்.

[37224]

முதலாவது
பிறந்த நாள் வாழ்த்து

கொழும்பு தொலைத் தொடர்புகள் நிலையத்தைச் சேர்ந்த
செயகுமார்-சாந்தி தம்பதிகளின்
தவப் புதல்வன்
★ கிருஷாந் ★

தனது முதலாவது பிறந்த நன்நாளை இன்று 27 – 06 – 95 வெள்ளவத்தையிலுள்ள இல்லத்தில் அப்பா, அம்மா, மாமா, சுற்றத்தாருடன் கொண்டாடும் ஆதிவேலன நோர்வே குஞ்ச, சித்தப்பா குடும்பத்தினர், தம்பி ராகுல், சுவிஸ் பாபு சித்தப்பா, சுவிஸ் பவானி அத்தை குடும்பத்தினர், மச்சான் அனோஜன், பிரான்ஸ் ரோகினி அத்தை குடும்பத்தினர், ஜேர்மனி மாலா அத்தை குடும்பத்தினர், தமிழீழத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் கிருஷாந்! நீங்கள் வளமெலாம் பெற்று வையகம் புகழ்ந்தேத்த நீடூழி வாழ்கவென இணுவையம்பதி முருகப் பெருமானை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

— அப்பப்பா குடும்பத்தினர்.

தையிட்டி,
காங்கேசன்துறை. [8446]

ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன் திருநாவுக்கரசு றஞ்சன்
(MAS. T. RANJAN)
(JUNIOR)

மலர்வு: 03 – 01 – 1971 உதிர்வு: 09 – 06 – 1994

திதி: 27 – 06 – 1995

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர் வகுப்பில் (A/L) கல்வி பயின்று கொண்டு இருந்த உன்னை 1988இல் ஜேர்மனி அனுப்பி வைத்தோம். ரஞ்சா! வாலிப வயதினிலே நீ வளர்த்த கனவுகளெல்லாம் பாதியிலே மறைந்ததையா! ஜேர்மனியில் திடீர் என்று காவினம் அடைந்தாய், உமதுயிர் காக்க, உமது அண்ணன்மார்கள், அன்பு மச்சான்மார் மச்சான், ஆருயிர் நண்பர்கள் எல்லோரும் வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை அளிக்கும் வேளையில் நீர் எல்லோருக்கும் அதிர்ச்சி கொடுத்து திடீரென மறைந்தீரோ! பெற்ற மகனின் பிரிவுதனை பொறுக்க முடியாமல் பேதைகள் இங்கு நித்தம் உன் நினைவால் நிம்மதி இழந்து விட்டோம். உன் சிரித்த முகம் காண எல்லோருக்கும் சிந்தை துடிக்குதடா ரஞ்சா! ஓராயிரம் ஆண்டு சென்றிடினும் மாறாது உன்நினைவு

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன்பிரிவால் துடிக்கும்.

அப்பா, அம்மா, குஞ்சு,
தம்பி, தாத்தா, மாமாமார்,
மாமிமார், சித்தப்பாமார், சித்திமார்,
அண்ணாமார், மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள்,
உடன் பிறந்த தம்பி, சகோதரி,
பெறாமக்கள், நண்பர்கள்.

ந. திருநாவுக்கரசு,
125, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம். [37149]

அம்பிகை துணை
வண் வடமேற்கு - ஆனைக்கோட்டை
திருவருள் மிகு
கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
சாந்திக மஹோற்ஸவம்

ஆரம்பம்	28 – 06 – 1995	புதன் மாலை 4-00 மணி
சப்பறம்	10 – 07 – 1995	திங்கள் இரவு 8-15 மணி
தேர்	11 – 07 – 1995	செவ்வாய் காலை 9-30 மணி
தீர்த்தம்	12 – 07 – 1995	புதன் காலை 9-00 மணி
முருகன் திருக்கல்யாணம்	13 – 07 – 1995	வியாழன் மாலை 4-00 மணி

28 – 06 – 95 முதல் 13 – 07 – 95 வரை
✶ தெய்வீக சொற்பொழிவு ✶
நேரம்: மாலை 6-30 முதல் 7-30 வரை
பொருள்:
தேவி பாகவதம்
நிகழ்த்துபவர்: "புராண இதிஹாஸ வாரிதி"
திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரை – கம்பன் கழகம்)

அடியார்கள் அனைவரும் வருக!
அன்னையின் அருள் பெறுக!

திருப்பணிச் சபை
இந்து இளைஞர் மன்றம்.

[37251]

DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

4 MONTHS

திங்கள், புதன் வகுப்புக்கள்

ஆரம்பம்: 03 - 07 - 1995

10-30 மணி

Lectures By
S. P. Sivapathasundaram
M. I. D. P. M [Lond]

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/
★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Short - Hand & Typing Lotus 1 - 2 - 3 புதிய பிரிவுகள் 03 - 07 - 95 ஆரம்பமாகின்றன
★ C. I. M. A, IAB வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[Pioneers in Computer Education]
16, 3rd CROSS STREET, JAFFNA.

[சி-1563]

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி சோமசுந்தரம் இராசமணி

தோற்றம்: 10 – 08 – 1920 மறைவு: 08 - 07 – 1994

திதி: 27 – 06 – 1995

உங்கள் ஆத்ம சாந்திக்காக [பிரார்த்திக்கும்]
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சேவியடி,
[illegible]. [37250]

வடிகாலில் குப்பைகளை போடுவதை தவிர்க்குக!

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள திறந்த வடிகால் அமைப்புக்குள் வீடு,வியாபார நிலையங்களத்தொழில் கழிவுப் பொருள்களைப் போடுவதினால், தொற்று நோய்பெருக்கமும், துப்புரவு செய்வதில் இடைஞ்சலும், ஏற்படுவதாக யாழ். மாநகரசபைப் பகுதியினர் தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

வாய்க்கால்களில் கழிவுப் பொருள்களைப் போடுவதினால் நீர்நோக்கம் ஏற்படுவதும், இதனுனம்பு விருத்திக்கும் ஈக்கள் பெருக்கத்திற்கும் உகந்த இடமாக அமைகிறது.

எனவே தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவும், துர்நாற்றத்தை இல்லாதொழிக்கவும், இவ்வாறான செயலைச் செய்ய வேண்டாமெனவும், இதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-14)

யாழ். கந்தர்மடம் அரசடி வீதி
அருள்மிகு
செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்
அம்பாளின் வருடாந்த
ஆனிமாத அலங்காரத் திருவிழா
நயினை நாகபூஷணி அம்பாள்
திருவிழாவும்

அம்பிகை அடியார்களே!

ஆனித் திங்கள் 14ஆம் நாள் நாளை (28 – 06 – 95) புதன்கிழமை தொடக்கம் 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

பகல் 10-00 மணிக்கு நவனாபிஷேகம் தொடர்ந்து பகல் பூசை

மாலை 6-00 மணிக்கு சகஸ்ரநாம அருச்சனை தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவாள்

இரவு 8-00 மணி தொடக்கம் 9-00 மணி வரை

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
பி. ஏ. (சிறப்பு) எம். ஏ.
அவர்கள்
✶ "சத்தி தத்துவங்கள்" ✶
என்னும் பொருள் பற்றி தெய்வீக தொடர் பேருரை வழங்குவார்.

இப்படிக்கு
ஆலய தர்மகர்த்தா

108, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27248)

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கொக்குவில் இளைஞர் சங்கம்
மனோன்மணி சனசமூக நிலையத்தினரால்

25 – 06 – 95 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பில் அதிர்ஷ்டத்திற்குரிய இலக்கங்கள்;

1 ஆம் பரிசு — 327. 2 ஆம் பரிசு — 112
3 ஆம் பரிசு — 336

ஆறுதல் பரிசுகள்,

1399.	971.	1098.	1447.	68.
1456.	968	1285.	131.	1009

பரிசுகளை 30 – 06 – 95 வரை பிற்பகல் 4-00 — 6-00 மணிவரை நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும்

— நிர்வாகம்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். [37247]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28 – 01 – 1932 உதிர்வு: 08 – 07 – 1994

சீனிவாசகம் செல்லத்துரை
(மோட்டார் கார் உரிமையாளர்)

திதி: 27- 6- 1995

குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எங்கள் வாழ்வுக்கு வழி காட்டிய அன்புத் தெய்வமே ஆண்டு ஒன்று மறைந்தாலும் அப்பா உங்கள் ஆசைமுகம் மறையாது அப்பா எங்கள் பாசமிகு அப்பாவே அன்புத் தெய்வமே அணையாத தீபமே உங்களை என்னும் போதெல்லாம் உள்ளம் நெருப்பாய் எரிகிறதே அப்பா கண்கள் இரண்டும் இருளாய் தெரிகிறதே உண்ணும் உணவெல்லாம் நஞ்சாய் மாறுகிறதே உங்களை நினைக்கும்போது உயிரே துடிக்கிறதப்பா ஆசைமுகம் பார்த்து ஓராண்டு காலம் ஆகுதப்பா உங்கள் முகம் பார்க்க எம்மனம் துடிக்குதப்பா, ஆசைப் பேர்த்தியுடன் எப்போது எம்மைக்காண வருவீரோ எம் உயிர் உள்ளவரை உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [37254]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கப்பல் பொருள்கள்

அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் சில அத்தியாவசியப் பொருள்களையும் இனிமேல் காலித் துறைமுகத்தில் வைத்தே அனுப்புவதென்று கொழும்பில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். துறைமுகத்தில் அங்கு தரித்து நிற்கும் கப்பல்கள் மீதும், துறைமுகத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஒரு காரணம். அரசாங்கம் புதிதாகக் கொள்வனவு செய்துள்ள ஆயுதங்களும், ஆயுத தளபாடங்களும் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்படுவது மற்றொரு காரணம். வந்து சேரும் இராணுவத் தளபாடங்களின் விவரம் பிறருக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் எவருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்று இராணுவம் கருதுகிறது.

அதன் பொருட்டு, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் பொருள்களை அங்கிருந்து அனுப்புவதில்லை என்ற முடிவு தமிழ் மக்கள் மீதான நெருக்குதலையும், அழுத்தங்களையும் மேலும் அதிகரிக்கும் செயலாகும்.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வடக்கே உணவுப் பொருள்களை அனுப்பும் போதே, இப்போது பெரும் தாமதம் ஏற்படுகிறது.

காலித் துறைமுகத்தில் இருந்து பொருள்களை அனுப்புவது என்பது மேலும் தாமதத்தை உண்டாக்கும். அதன் விளைவாக இங்கு வந்து சேரும் உணவுப் பொருள்களின் அளவு மேலும் குறைந்து போகும்!

உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பாவனைப் பொருள்களும், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் அரசாங்கத் நிறுவனங்களுக்குத் தேவையான பொருள்களும் கப்பல் மூலமே யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. அவையும் இதுவரை கொழும்புத் துறைமுகத்தில் இருந்தே எடுத்து வரப்பட்டன.

அத்தியாவசிய உணவுப் பொருள்களையே காலியில் இருந்து அனுப்ப அரசு முடிவு செய்திருப்பதால், ஏனைய பாவனைப் பொருள்களும், இனிமேல் அங்கிருந்து தான் அனுப்பப்படும் என்பதற்கு அறிவித்தல் தேவையில்லை.

கொழும்பில் வாழும் தமிழர்களே தங்கள் உயிர், உடைமைப் பாதுகாப்புக் எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் எப்போதும் கைது செய்யப்படலாம், தாக்கப்படலாம் என்ற அச்சத்துடன் பொழுதை ஓட்டுகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்துபோய் அங்கு தங்கி நிற்கும் தமிழர் நிலை அதனை விட மோசமானது.

இத்தகைய பின்னணியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் அரசு நிறுவனங்களுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகக் கொழும்பு செல்பவர்கள் —

பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து, காலிக்கு லொறிகளில் எடுத்துச் சென்று, அங்கு வைத்து கப்பலில் ஏற்றி அனுப்புவதில் எத்தனை சிரமங்களும், கஷ்டங்களும் பணச் செலவும் இருக்கும் என்பதனை எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

கொழும்பில் கொள்வனவு செய்து காலிக்குக் கொண்டு சென்று யாழ்ப்பாணம் அனுப்புவது என்பது மிகுந்த நடைமுறைச் சிரமமானது.

மொத்தத்தில், அரசின் துறைமுக மாற்ற முடிவு தமிழர் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கும் மறைமுக ஏற்பாடாகும், ஜக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையைவிட மிக மோசமானது. இந்தப் புதிய இறுக்கத்தால் பல்கலைக் கழகம், ஆஸ்பத்திரிகள், அரச நிறுவனங்களின் போன்றன இயங்காமல் மூடப்படும் ஆபத்து சூழ்ந்து வருகிறது.

இவை எல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் இலக்கை நோக்கிய அம்புகள்.

எயர்லங்கா பணிப்பாளர் சபை

கொழும்பு, ஜூன் 27

எயர்லங்கா பணிப்பாளர் சபை அண்மையில் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய பணிப்பாளர் சபையை தகவல் தொடர்பு சுற்றுலா, விமான சேவை அமைச்சர் தர்மசிறி சேனநாயகா நியமித்துள்ளார்.

பணிப்பாளர் சபையின் தலைவராக வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் டபிள்யு. ரி. ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளன.

ஆறு பணிப்பாளர்களைக் கொண்ட இச்சபைக்கு ஏனைய அங்கத்தவர்களாக ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலபட்டபென்டி, நிதி அமைச்சின் செயலாளர் எ. எல். ஜயவர்தன, தகவல் தொடர்பு, சுற்றுலா விமான சேவை அமைச்சின் செயலாளர் எட்மண்ட் ஜயசிங்க, நிவ்றால் ஜயமான்ன, கப்டன் எல். ராஜபக்ஸ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-10)

இளைஞரை வீதிக்கு இழுத்து வந்து படையினர் தாக்கினர்

கொம்மாந்துறையில் இராணுவம் அட்டகாசம்

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பு, கொம்மாந்துறையில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்து, வெளியே இழுத்து வரப்பட்ட ஆண்கள் வீதிகளில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு நிகழ்ந்தது.

சம்பவதினம் நள்ளிரவு 12.00 மணியளவில் கொம்மாந்துறையில் ஷெல் ஒன்று வெடித்தது.

அதனை அடுத்து அருகில் உள்ள வீடுகளுக்கு நிடுதிப்பென பாய்ந்து வந்த இராணுவத்தினர், அங்கு இருந்த மக்களை எழுப்பினர்.

வீடுகளில் இருந்த இளவயது ஆண்களை நடு வீதிக்கு அழைத்துச் சென்று தாறுமாறாகத் தாக்கினர்.

அதன் பின் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர்.

புலிகளின் நடமாட்டம் பற்றிய தகவல் ஏதும் தெரிந்தால் தமக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் படையினர் மக்களை எச்சரித்தனர். [இ-5]

திருமலையில் மாணவர்கள் மீது கடும் சோதனை

திருகோணமலையில், பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரின் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையில் விடுதலைப் புலிகள் மாணவர் போன்று நடமாடுவதாகவும் அதனாலேயே இவ்வாறு மாணவர்கள் இராணுவத்தினரின் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் அவசரத்தால் தவறான ஆயுத உபகரணங்கள் கொள்வனவு

கொழும்பு, ஜன் 27

யுத்த சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் அரசு காட்டிய அவசரத்தால் தவறான வகை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன என அறிய வருகின்றது.

இராணுவம் சுமார் 10 நாட்களுக்கு முன் குத்தகைக்குப் பெற்ற தரையிறங்கு கப்பல் பெரும் செலவினான வீண்விரயம் என அறிய வருகிறது.

குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபா (2,500 டலர்) செலவு கும் இந்தக் கப்பல் துருப்புகளையும் டாங்கிகளையும் ஏற்றுவதற்கான ஒரு கலம் அல்ல எனவும் பண்டங்களை ஏற்றுவதற்கான கப்பல் எனவும் இப்பொழுது தகவல் வெளியாகியுள்ளது.

500 தொன் எடையுள்ள, ஆகக் கூடியது மணித்தியாலத்துக்கு 5 மைல் வேகமுள்ள இந்தக் கப்பலைக் கொண்டு கடற்கரைகளைக் காப்பாற்ற முடியாது எனவும் கடற்புலிகள் அதை இலேசாக தாக்கமுடியும் எனவும் அறிய வருகின்றது.

இந்த கப்பலை கடற்படை அதிகாரி ஒருவர் சோதனை செய்ததாகவும் ஆகவே இதற்குக் கடற்படையே பொறுப்பு எனவும் ராணுவம் கூறுகின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பெருந்தோட்டப் பகுதியில் வேலை நிறுத்த முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 27

பெருந் தோட்டப்பகுதியில் பாரிய வேலை நிறுத்தங்கள் முதலிய நடவடிக்கைகள் ஏற்பட உள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற அவசரக் கூட்டம் ஒன்றில் கூட்டுத் தோட்டத் தொழிற் சங்க ஸ்தாபனம் தமது ஆட்சேபனை இயக்கத்தை ஜூலை 11இல் ஆடையாள வேலை நிறுத்தம் ஒன்றுண்டாரம்பிப்பது எனத் தீர்மானித்துள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் பேச்சாளரும் இலங்கை செங்கொடித் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஒ. ஏ. ராமையா, பல்லாண்டுகளாகப் பல்வேறு அரசாங்கங்கள் ஏழைத் தோட்டத் தொழிலாளர்களை மறந்துவிடும் பழக்கத்தைக் கொண்டுள்ளன. இன்றைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கமும் தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகளை அளித்த போதும் இவ்வாறே நடந்து கொண்கின்றது என்று கூறினார்.

1993இல் வாக்குறுதி அளித்தபடி எட்டு ரூபா சம்பள உயர்வையும் பெருந்தோட்ட இலாபத்தில் 10 சதவீதப் பங்கையும் வழங்காமை தனியார்மயமாக்கத் திட்டத்தின் போது வாக்குறுதி அளித்தபடி லயன் வீடுகளின் சொத்துரிமையை வழங்காமை ஆகியவற்றை ஆட்சேபித்து தொழிற்சங்கங்கள் நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளன.

தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தல், அவற்றை நீண்டகாலக் குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றையும் தொழிற்சங்கங்கள் ஆட்சேபிக்கின்றன.

அமைச்சர் தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிர்ந்த தொழிற்சங்கங்கள் அனைத்தும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆட்சேபனை நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளன எனவும் ஒ. ஏ. ராமையா கூறினார். (உ)

காலியில் தமிழரின் கடைகள் எரிக்கப்பட்டது ஏன்?

கொழும்பு, ஜூன் 27

வியாபார ஏகபோகத்தை தமிழர்களிடம் இருந்து விடுவிப்பதற்காகவே காலியில் தமிழர்களின் கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாக இரகசிய பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

—இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பொலீஸ்மா அதிபர் பிரான்சிடி. சில்வா.

காலிச்சம்பவங்களின் மின் இணவாதசக்திகளும் சம்பந்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

—இவ்வாறு மேலும் அவர் தெரிவித்தார். (ஒ-5)

பதில் செயலாளராக பாலபட்டபென்டி

கொழும்பு, ஜூன் 27

பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளராக ஜனாதிபதியின் செயலாளர் குகம் சிறி பாலபட்டபென்டி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளரான சந்திரானந்த டி சில்வா, இருதய சத்திர சிகிச்சைக்காக விடுமுறையில் சென்றிருப்பதை அடுத்தே அவரது இடத்துக்கு பதில் செயலாளராக பாலபட்டபென்டி நியமிக்கப்பட்டிருக்கிறார். (உ)

கட்டுநாயக்காவில் விமானம் ஏற 4மணி நேரம் முன்னர் செல்ல வேண்டும்

கொழும்பு, ஜூன் 27

கட்டுநாயக விமான நிலையத்திலிருந்து விமான மூலம் பயணம் செய்வோர் தற்பொழுது விமானம் பறக்கும் நேரத்துக்கு 4மணி நேரம் முன்னதாகச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

விமான நிலையத்திலிருந்து ஒன்றில் குண்டைக் கண்டு பிடித்ததுமுதல் ஒருவர் எதனைப் பரிசோதிக்க குறைந்தது அரை மணிநேரம் எடுக்கின்றது. இதனால் வரான கியூவரிசை நீண்டு ஒருவர் பயணம் செய்வது தடையாகலாம்.

அதுபோலவே, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கியவர்களும் வெளியேற நீண்ட நேரம் எடுக்கின்றது. என அறியவருகிறது. [உ]

கிழக்கில் படை அதிகாரிகள் விரைவில் இடம் மாற்றம்

கிழக்கு மாகாணத்தில் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உயரதிகாரிகள் பலர் இடம்மாற்றப்படவிருக்கின்றனர்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து—

அதற்கு ஈடுகொடுக்கத்தக்க வகையில் படைகளை வழிநடத்தக் கூடிய அதிகாரிகளை கிழக்குக்குப் பொறுப்பாக நியமிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும்—

விரைவில் அதிகாரிகள் இடம்மாற்றம் இடம் பெறும் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. [உ]

அமோனியம் சல்பேற் உரத்துக்கும் தடை

வவுனியாவில் அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 27

வடபகுதிக்கு அமோனியம் சல்பேற் உரம் எடுத்து வரவும் வவுனியாவில் இராணுவம் தடை விதித்துள்ளது. தற்போது வவுனியாவில் இராணுவக்கட்டுப்பாட்டு இல்லாத பிரதேசத்தில் 1,500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே போன்று மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலும் சிறுபோக நெற்செய்கை, சிறுதானியப் பயிர்ச்செய்கை என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமோனியம் சல்பேற் உரமும் தடை செய்யப்பட்டுள்ளது விவசாயிகள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனை அடுத்து வேறு பசளை வகைகளை பாவிக்க அனுமதி அளிக்க வேண்டும் அல்லது, இதற்கு தகுந்த நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கெனவே யூரியா உரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-5)

ராமகிருஷ்ண ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

அம்பன் சமநல சேவை நிலையமும் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும் இணைந்து நடத்தும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்திவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் அம்பன் சமநலசேவை நிலையத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர்கள் திரு. ஆ. சிவகுமாரி, திரு. செ. ஸ்ரீநிவாசன் ஆகியோரும் சமநல சேவை நிலைய உயர்அலுவலர்களும் சிறப்புரைகளை நிகழ்த்துவார்கள்.

மகேஸ்வர பூசை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (உ)

போலி விசாவுடன் இத்தாலி செல்ல முயன்ற யாழ்.பெண்

கட்டுநாயக்காவில் சிக்கினார்

கொழும்பு, ஜூன் 27

போலிக் கடவுச்சீட்டு, போலி விசாவுடன் இத்தாலி செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலீஸாரிடம் சிக்கிக் கொண்டார்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தை அடுத்து கொழும்பில் உள்ள ஜ.ஒ.மி.கடை ஒன்றை பொலீஸார் முற்றுகையிட்டனர்.

இந்தப் பெண்ணை இத்தாலிக்கு அனுப்பிய முகவரைக் கைது செய்துள்ளதுடன் அங்கிருந்து இத்தாலிய விசாக்கள் பொறிக்கப்பட்ட 30 போலிக்கடவுச் சீட்டுகள், போலி அடையாள அட்டைகள் மற்றும் போலி, பிறப்பு, இறப்பு திருமணப்பத்திரங்களையும் கைப்பற்றினர்.

இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஒருவரை அனுப்ப இந்த முகவர் மூன்றரை லட்சம் ரூபாவை அறவிட்டு வருவதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாம். (ஒ-3)

தங்கச் சங்கிலிகள் திருடிய முன்னாள் இன்ஸ்பெக்டர்!

கொழும்பு, ஜூன் 27

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சங்கிலித் திருட்டில் ஈடுபட்டு வந்த முன்னாள் பொலீஸ்ப் இன்ஸ்பெக்டர் ஒருவரை புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

பிரேமதாசா கொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் மருமகனான இவர்— தனது ரிவோல்வரையும் வெடிமருந்துகளையும்ஒருபெண்ணுக்கு விற்றார் என்ற காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

போதை வஸ்துப் பிரியரான இவர் போதைப் பொருள்கள் வாங்குவதற்காகவே திருட்டுகளில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் —

24க்கும் மேற்பட்டதங்கச் சங்கிலிகளை இவர் பெண்களிடம் இருந்து பறித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 46பேர் மீது கிடைக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்து அவர்கள் தொடர்பான புலனாய்வுகள் நடைபெற்று வருவதாகவும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இவர்களுக்கு அடங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

புலிகளின் குரல் வானொலியில்

27-06-1995 செவ்வாய் இரவு

★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
★ 8 20 — நலந்தானா?
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன்எழுதிய-''பதிராக்குறை''
★ 8-50 — தாயகப் பாடல்கள்

28-06-1995 புதன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 8-00 — மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — நேயர் நெஞ்சம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து—என் தெரிவு

மட்டக்களப்பில் ஒரு வார காலத்தில் 4 இராணுவ முகாம்கள் மூடப்பட்டன

கொழும்பு, ஜூன் 27

அண்மைக் காலமாக அதிகரித்து வரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பில் கடந்த வாரத்தில் மட்டும் நான்கு இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

தம்மானம் வெளி, தரவைக் குளம், கூளாவடி, நாபப்பதாவில் ஆகிய படைமுகாம்களே மூடப்பட்ட முகாம்களாகும்.

இவை அனைத்தும் காட்டுப் பகுதிகளிலும், வயல் பிரதேசங்களிலும் அமைந்தவை மட்டக்களப்புக்கு அருகே விஜயபுரம் பகுதியில் இருந்த பொலீஸ் காவல் நிலையமும் மூடப்பட்டுள்ளது.

இதே சமயம் புலி பாய்ந்தகல் இராணுவ முகாமிற்கு மேலதிக படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதான முகாம்களில் இருந்து காடுகளை நோக்கி இரவு பகலாக தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. (இ-5)

இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். நோட்டறிக் கழகமும், பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும் இணைந்து நடத்தும் வடமராட்சி கிழக்கு பகுதிகளான இலவச மருத்துவமுகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும். (இ-14)

திருமறை கலாமன்ற நிறைவு விழா

திருமறைக் கலாமன்றத்தின் கவின்கலைகள் பயிலகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 1-ஆம், 2-ஆம் திகதிகளில் யாழ். பிரதான வீதி மன்றக்கலை அரங்கில் நடைபெறும்.

தினமும் மாலை 6-45 மணிக்கு ஆரம்பிக்கும் கலை நிகழ்ச்சிகளில் வாய்ப்பாட்டு, நடனம், இன்னிசை ஆகியன இடம்பெறும். (ஒ-51)

ஊர்காவல் படைக்கு 1,000 பேர்

கொழும்பு, ஜூன் 27

புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து புதிதாக ஊர்காவல் படைக்கு ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர் என பொலீஸ் மா அதிபர் பிரான்சிடி சில்வா தெரிவித்தார்.

எல்லைப்புற கிராமங்களில் பணியாற்றுவதற்கே இவர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதாக அவர் கூறினார். (உ)

மின்விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். செயலகத்திலுள்ள ஜெனரேற்றர் இயங்குவதற்கு கொழும்பிலிருந்து டீசல் வந்து சேராமையினால் செயலகத்திற்கான மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. (உ-100)

வெளியேறிய 150 பொலீஸாரை கைது செய்ய முடியாத நிலை

பொலீஸில் இருந்து வெளியேறிவிட்ட சுமார் 150 பொலீஸாரைக் கைது செய்ய எடுத்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலை தோன்றியுள்ளதாக தென்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்படி பொலீஸாரை நீதிமன்ற உத்தரவின் கீழ் கைது செய்யும்படி பொலீஸ் தலைமைச் காரியாலயம் பிறாந்திய பொலீஸ் பிரிவுக்குக் கட்டளையிட்டிருந்தது.

ஆனால் இக்கட்டளையை நடைமுறைப்படுத்தவே அங்கு பொலீஸார் போதுமான அளவில் இல்லையாம்.

அதேபோன்று, பொலீஸ்மா அதிபரினால் இடமாற்ற உத்தரவு அனுப்பப்பட்டால் அந்த இடங்களுக்கு பதிலாள் நியமிக்கப்படாமல் இடமாற்றம் செய்ய முடியாது.

இவ்வாறு பதிலாளை தேடும்போது அவர்கள் மருத்துவ லீவில் செல்லுகின்றார்கள். இதனால் பிராந்திய பொலீஸ் நிலையங்கள் ஒன்றுமே செய்யமுடியாத நிலை தோன்றியுள்ளது.

வேலை நீக்கக் கடிதம் அனுப்பப்பட இருக்கும் சமயம்— நீண்ட நாட்களுக்குப் பின் வேலைக்கு வருபவர்களும் இருக்கிறார்களாம்.

இதேசமயம் மட்டக்களப்பு பகுதியில் நிலவும் பொலீஸாருக்கான தட்டுப்பாட்டால் வவுணதீவு, விஜயபுர, களுவாஞ்சிக்குடி பொலீஸ் பாதுகாப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் அவசரத்தால்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

இந்தக் கப்பலை ரேடியா கப் பரிசிலனை செய்து அங்கீகரிக்க ஏழு மாதங்களுக்கு முன்னர் தனது எலிஷ்ட் அதிகாரி ஒருவரை மலேஷியாவுக்கு அனுப்பிய கடற்படை, இப்போது கப்பல் குத்தகைக்கு அமர்த்தப்பட்டதற்குத் தான் பொறுப்பல்ல என்று கூறுகின்றது.

ஆனால்—

கடற்படை அதிகாரி ஒருவர் இக்கப்பலை சிபாரிசு செய்ததால் ஏற்பட்ட தவறுக்கு கடற்படையே பொறுப்பு என இராணுவம் கூறுகின்றது.

கடற்படைப் பொறியியலாளர்கள் உட்பட பல உயர் மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு சோதனை நடத்த வேண்டிய வேலையை எலிஷ்ட் தர அதிகாரி ஒருவரைக்கொண்டு மேற்கொண்டது சந்தேகத்தைக் கிளப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தரையிறங்கு கப்பலை இராணுவத்தினர் பயன்படுத்தும் வேளையில் அதில் பணியாற்ற வேண்டிய வெளிநாட்டு மாலுமிகளு, அக்கப்பல் இராணுவத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்காக இலங்கைக்குத் தருவிக்கப்படுகின்றது என்ற தகவல் முன்னரே தெரிவிக்கப்படவில்லையாம்.

இதனால் கடந்த வாரம் இக் கப்பலை இராணுவத்துக்காகச் செலுத்தும்படி கோரிய போது அந்த மாலுமி அதற்கு மறுத்து விட்டார்.

இந்தவகை பிரச்சினைகளால் இக்கப்பலை திருப்பியனுப்புவது குறித்து யாழ்ப்பாணம் அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர —

ஜப்பானிடமிருந்து ஸ்ரீலங்காப் படைகளுக்கு என அண்மையில் நான்கு கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட "எலக்ட்ரோனிக்" சாதனங்கள் குறித்தும் சர்ச்சைகள் கிளம்பியிருக்கின்றன.

"றோடர் சமிக்ஞைகளைக் குழப்பும் வானொலிச் சாதனங்கள்" கொள்வனவு செய்வதற்கு ஜப்பான் சென்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழுவில் முப்படைகளின் "எலக்ட்ரோனிக்" யுத்த ஆயுதப் பிரிவின் அதிகாரிகள் எவரும் இடம்பெறவில்லை என்றும் —

ஏற்கனவே ஸ்ரீலங்கா படைகளிடம் பெருமளவு வைவசம் உள்ள — பழைய காலத்தைய — கருவிகளே மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)

மட்டக்களப்பில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளுக்குள் புகுந்து அங்கு நிற்போரைப் பிடித்துச் செல்கின்றனர்.

"மோட்டார் சைக்கிள் படையணி" பிடித்துச் செல்வோர் மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று மட்டக்களப்பு சமாதானக் குழு உறுப்பினர்களில் ஒருவரான வண. பிதா ஹரி மில்லர் "சண்டேலீடர்" பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

பிரஸ்தாப படையணி பிடித்து சென்று விடுவித்த மாணவன் ஒருவன் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டான் என்பதனையும் வண. பிதா விவரித்தார்.

ஆறு நாட்களாக மிகக் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்ட மாணவனுக்கு சிறுநீருடன் இரத்தம் சென்றதாகவும் —

அது படையினரின் தாக்குதல் எவ்வளவு கொடூரமாக இருந்தது என்பதனைக் காட்டுவதாகவும் —தெரிவித்தார்.

கைது செய்யப்படுவோரின் காக்களைவயர்களால் இறுகக் கட்டி அவரைத் தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டு, தலையை தண்ணீர் வாளிக்குள் அமுக்கி விடும் படையினர்.—

அவ்வாறு கட்டி தொங்கவிட்டவரை கடுமையாக அடித்துத் தாக்குவதுடன், உடம்பில் கண்டபடி ஆணியாக் குத்திக் காயப்படுத்துகிறார்கள் — என்றும் வண. பிதா ஹரி மில்லர் தெரிவித்திருக்கிறார்.

இந்த வகைக் கொடுமைக்கு "ஹெலிகொப்டர் சித்திரவதை" என்று படையினர் பெயரிட்டுள்ளனராம். (அ)

தமிழ் மொழி, கலைத்திறன் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27 யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு, குழுக்களுக்குமான சான்றிதழ்கள், பாராட்டிதழ்கள், பரிசுகள் வழங்கும் விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஒரு பிரிவான யாழ். மாவட்ட தமிழ் மொழி கலைத்திறன் வளர்ச்சிக் குழுவினால் நடத்தப்படும் இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பாடசாலைகள் தமிழ் மொழி கலைத்திறன் வளர்ச்சிக் குழுத்தலைவர் திரு. நா. சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார்.

நினைவுக்கல் நாட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 27 நேற்று முன்தினம் புல்மோட்டையில் படையினரின் காவல் அரண் தகர்ப்புச் சம்பவத்தில் வீரச்சாவடைந்த இரண்டாம் லெப்டினன்ட் செல்வகுமாரின் (விநாயகம் ஜெயதரன் — பளை) இறுதி வீரவணக்கமும் நினைவுக்கல் நாட்டலும் இன்று நடைபெறும்.

அவரது உருவப்படம் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பளை சந்தை மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்

பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நாட்டப்படும். (ஐ)

ஆங்கில சொல்வதெழுதல் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27 வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படும் ஆங்கில சொல்வதெழுதல் போட்டி நாளை புதன் கிழமை காலை 8.30 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி வலய மட்டத்தில் ஏற்கனவே நடந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வர். (ஐ)

சீலன் குடியிருப்பு ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27 நாவற்குழி சீலன் மாதிரிக் குடியிருப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய் மாலை 6 மணிக்கு குடியிருப்பு கலையரங்கில் நடைபெறும். (ஐ)

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன். 27 யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்குத் தொடரில் —

முதல் நிகழ்வாக நாளை புதன் கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் —

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை "90க்குப் பின்னர் ஐரோப்பா — ஒரு மதிப்பீடு" என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார். [அ]

மதுவரி பரிசோதகர் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன். 27 மதுவரி அத்தியட்சகர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்தமாதம் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்பு நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தின் இரண்டாம் மாடியில் நடைபெறவுள்ளது

— இது தொடர்பான தகவல் யாழ். அரச அதிபருக்கு கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவூடாக நேற்றுக்கிடைத்தது.

நேர்முகப்பரீட்சைக்கு பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த தலைமைப் பரிசோதகர் திரு. வி. துரைராஜா, யாழ். மதுவரி நிலையத்தைச் சேர்ந்த தலைமைப் பரிசோதகர் திரு. சே. இராஜசிங்கம், மல்லாகம் மதுவரி நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். டவுனோ ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர் [ஐ-4]

73 பாடசாலைகள் பங்கு பற்றிய 43 போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு விழாவில் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

போட்டியில் பங்குபற்றிய 73 பாடசாலைகளில் ஆக்கக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் (51 புள்ளிகள்), உடுவில் மகளிர்கல்லூரி இரண்டாம் இடத்தையும் (48 புள்ளிகள்) இராமநாதன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் (47 புள்ளிகள்) பெற்றுள்ளன.

இந்த மூன்று பாடசாலைகளுக்கும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் சிறப்பு பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

நாளை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. க.ப தமிழிச் செல்வன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளில் 10 நிகழ்ச்சிகள் விழாவில் மேடையேற்றப்பட உள்ளன. [ஐ-14]

எகிப்து--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த தப்பினார்.

அவருடன் கூடச் சென்ற பாதுகாப்புப் படையினர் கொலைஞர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் நால்வர் உயிரிழந்தனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகளே முபாரக் மீது கொலைத் தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ 4)

"ஜிகாத்".

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும், கடைகள் மற்றும் உடைமைகளுக்கும் தீவைத்து நாச வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

அவ்வாறு செய்வதன் மூலம் மட்டக்களப்பின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பி தமிழ் முஸ்லிம் மக்களிடையே பதற்றத்தை உண்டாக்குவதாக காத்தான்குடி பல நாக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம். ஐ. எம். உசனார் "சண்டே லீடருக்கு" தெரிவித்திருக்கிறார்

கிழக்கில் இதற்கு முன்னரும் "ஜிகாத் இயக்கம்" என்ற பெயரில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஒன்று இயங்கி வந்தது.

"ஜிகாத்" என்ற அரபுச் சொல்லுக்கு புனிதப் போர் என்பது பொருளாகும். (அ)

புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனரீதியாகவே அரசு யுத்தப் செய்கிறது என்பதற்கு பல காரணிகள் காட்டப்பட்டுள்ளன. எனவே புலிகள் இப்போது பலவீனப்பட்டால் அது தமிழ் இனம் பலவீனப்பட்டதற்குச் சமனாகும்.

தமிழ் மண்ணில் இன்று அரசு மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு யுத்த முனைப்பு நடவடிக்கைகளுக்கு முழுமையான எதிர்ப்பைக் காட்ட வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

வெளிநாடுகளில் நடப்பது போல் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்ட ஜனநாயகரீதியான ஊர்வலமோ, கூட்டமோ வைக்க முடியாதபடி தலைநகரில் தமிழர்கள் அரசினால் பலவித நெருக்கடிகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவதாக இலங்கை, இந்திய அரசுகள் செய்யும் பிரசாரம் இந்தியாவைப் பொறுத்தவரை தேர்தல் சாரமாகவும், இலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மக்களை திசைதிருப்பும் பிரசாரமாகவும் தெரிகிறது.

பிரபாகரனைப் பிடிக்கக் கூடிய உலக சக்தியைக் கொண்டுவந்தாலும் அவரை உயிருடன் பிடிக்கமுடியும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே இதுதொடர்பாகத் தேடுதல் வேட்டை என்பது பயனற்ற ஒன்றாகவும், அதிக செலவான ஒன்றாகவும், உயிரிழப்புகள் கூடியதாகவும் இருக்கும். பிரபாகரனுக்கு அப்படி ஒன்று நடந்தால் தமிழினத்தின் உரிமைப் போராட்டம் [illegible] சிதைந்துவிடும்.

[illegible] தெரிவித்துள்ளார். (ஐ)

போராளி வீரச்சாவு

மட்டக்களப்பில் காயங்களோடு சோதனை மினி முகாம் தாக்கி அழிக்கப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் குணசீலன் (காசிநாதன் தவனேசன் — மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ-4)

ஆடைத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் கிழக்கில் சிங்கள, முஸ்லிம் பகுதிகளில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கி வரும் அதே வேளை தமிழ் பிரதேசங்களில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ 4)

மர்மக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட எட்டு சடலங்களும் இதுவரை அடையாளங்காணப்படவில்லை இது தொடர்பாக எவரும் இதுவரை வழக்கு செய்யப்படவில்லை.

புனித சிங்கள பகுதியில் டயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் சடலம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி காணப்பட்டது. [ஐ-10]

பிரதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே தான் மக்களைப் பாதுகாக்க பிரதேச பாதுகாப்புப் படைகளை அமைக்கு மாறு அரசாங்கத்தை கேட்டுள்ளேன்.

அச்சுறுத்தல் காரணமாக மக்கள் தாம் வாழ்ந்த பாரம்பரிய பிரதேசங்களை விட்டு வெளியேற முடியாது. பிரதேச பாதுகாப்பு படைகளை அமைப்பது மக்களின் அச்சத்தைப் போக்க பெரிதும் உதவும்.

— இவ்வாறு அமைச்சர் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ- 14)

தடை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாடுகளில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும்படி பல நாடுகளை ஸ்ரீலங்கா அரசு கோரியதாகவும்—

தனது நாட்டில் புலிகளைத் தடை செய்யாமல் பிற நாடுகளில் புலிகளைத் தடை செய்யுமாறு ஸ்ரீலங்கா கோருவது பொருத்தமற்றது என பல வெளிநாட்டு அரசுகள் ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரிவித்ததாகவும்—

செய்திகள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

இதனையடுத்தே புலிகளை சட்ட விரோத அமைப்பாகப் பிரகடனப்படுத்துவதற்கான முயற்சியில் அரசுத் தலைமைப்பீடம் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டால் —சட்ட விரோத அமைப்புடன் எந்த விதப் பேச்சுகளும் நடத்த முடியாது என்பதால் — எதிர்காலத்தில் அமைதி முயற்சி முற்றாகத் தடைப்பட்டுவிடும் என்று அரசுக்குச் சுட்டிக் காட்டப்பட்டும் உள்ளதாம்.

1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்" கீழ் எந்த அமைப்பையும் தடை செய்வதற்கு வழி இல்லை.

இந்த நிலையில் —

நாடு முழுவதிலும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாத சூழ்நிலையில் —

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாயின் அதற்கு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.

ஆனால் அச்சட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு அச்சட்டத்திற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவை அரசு பெற வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் —

புலிகளைத் தடைசெய்ய அரசு முயற்சிக்குமானால் அதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. ஆதரவு வழங்கும் என அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பி. தயாரதன அறிவித்திருப்பது தெரிந்ததே.

எனவே ஐ தே. கவின் ஆதரவுடன் அத்தகைய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து புலிகளைத் தடை செய்யப்பட்ட அமைப்பாகப் பிரகடனப்படுத்த அரசு முயலக் கூடும் எனத் தெரிகிறது. (உ)

இரு தேசங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் பேச்சு நடத்தும் அதேவேளை, புலிகளையும் தமிழ் மக்களையும் பிரிக்கும் இரட்டை வேட முயற்சியில் சந்திரிகா அரசு ஈடுபட்டது என்று வசந்தராஜா குற்றம் சாட்டியுள்ளார். தமது குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமாக பல விடயங்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

சரித்திர உண்மை

தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றிய சரித்திர உண்மைகளைச் சரிவரப் புரிந்து கொள்ள முன்னைய அரசுகளைப் போல சந்திரிகா தலைமையும் தவறியதே அரசின் தற்போதைய உத்தி தோல்வியுற்றதற்குக் காரணம் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது.

சிங்கள தேசத்தில் வாழும் சிறுபான்மை இனமே தமிழர்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே அரசின் சித்தாந்தம் அமைந்துள்ளது. ஆனால் உண்மை வேறாக உள்ளது.

சிங்களவர் தேசம், தமிழர் தேசம் ஆகிய இரண்டையும் கொண்டதாகவே ஸ்ரீலங்காவின் சரித்திரம் மலர்ந்து வந்திருக்கிறது.

சிங்கள தேசத்துடன் ஒப்பிடும் போது கணக்கு அடிப்படையில் தமிழ்தேசம் சிறிதாக இருந்து வந்த போதிலும் தமக்கு உரித்தான அடையான வேறுபாடுகளுடன் இரண்டும் அக்கம்பக்கமாகவே மலர்ந்து வந்துள்ளன.

நிட்டவட்டமாக அடையாளம் காணப்படக் கூடிய தமிழர் தாயகமும் நீண்ட சரித்திர காலத்தில் உருவாகியுள்ளது.

தாங்கள் ஒரு தனி நாடு என்ற சுய உணர்வும், சுயநிர்ணய உரிமை தமக்கு உண்டு என்ற விழிப்பும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பின்னர் —

தீர்வை திணிப்பது முட்டாள்தனம்

தமிழர் தேசம் மீதுதான் விரும்பும் தீர்வு ஒன்றை தெற்கில் உள்ள அரசு பலவந்தமாகத் திணிக்க முடியுமென எண்ணுவது முட்டாள்தனமானதாகும்.

நிரந்தரத்தம் ஏதுமின்றி — சுயமாகச் செய்யப்படும் — ஓர் உடன்பாட்டின் மூலம் மட்டுமே தீர்வை எட்ட முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் விடுதலைப் போராட்டத்தின் — மறக்கப்பட முடியாத — தலைவர்கள் விடுதலைப் புலிகளே என்பதை ஏற்றுக் கொள்வதன் மூலமே இத்தகைய ஓர் உடன்பாட்டை எட்டமுடியும். நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மை இதுதான்.

அதுதான்—

புலிகளின் மக்கள் ஆதரவுத் தளத்தை குறைவாக மதிப்பிட்டு, இராணுவ ரீதியாக அடக்க முயற்சிக்கும் திட்டம் தோல்வியில் முடியும் என்பதை நாம் ஏற்பதற்குக் காரணமாகும்.

இணங்கிப் போவதே சிறந்தது

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே என்ற அடிப்படையில் புலிகளுடன் இணங்கிப் போவதே ஆக்கபூர்வமான முன்னேற்றத்துக்கு ஒரே வழியாகும்.

ஏனெனில் புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள பயங்கர நிலையிலிருந்து மீள்வதற்கு —

யுத்தத்தை நிறுத்தி, மீண்டும் சமாதானப் பாதையில் இறங்கும்படி அரசைத் தூண்டுவதே ஒரே வழியாகும்.

ஆனால் இம்முறை பேச்சுவார்த்தையின் மெய்ப்பொருள், விகிதாசாரமானதாகவும், நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கியதாகவும் இருக்கவேண்டும்.

சந்தர்ப்ப வசமாக—

எதிர்கால "ஸ்ரீலங்கா—ஈழம் குடியரசின் கூட்டாட்சிக்கு" (Federal Union of The Republic of Sri Lanka And Eelam) அல்லது "ஸ்ரீலங்கா — ஈழம் ஐக்கிய நாடுகளுக்கு" (United States of Sri Lanka And Eelam) ஆரம்ப நிலையாக அது இருக்கக்கூடும்.

உள்ளடக்கமே முக்கியமானது; தலைப்புகள் அல்ல.

எமது இந்த அழகிய தீவை சமாதானமாகப் பகிர்ந்து கொள்வதற்கான இத்தகைய மிகப் பெரிய நடவடிக்கை, இரு தரப்பினருக்கும் ஈடு இணையற்ற பொருளாதார லாபச்சம் கிட்ட வழி செய்யும்.

—இவ்வாறு அந்த நீண்ட கட்டுரையில் திரு. வசந்தராஜா மேலும் தெரிவித்துள்ளார். (உ)

விளையாட்டு நிகழ்வுகள்

காங்கேசன் துறை யமறோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாம் கற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகுகின்றன. இன்று மாலை உரும்பராய் இந்து மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ 3.30 மணி:– விநாயகர் எதிர் பல்லைக்கழகம்

★ 4.30 மணி:— ஞானமுருகன் எதிர் சென் நிக்கிலஸ். (உ)

★ ★ ★

யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்திய உதைப்பந்தாட்டச் கற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று செல்வாய் பிற்பகல் 4 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் ச.ச. நிலைய அணியை எதிர்த்து சென். மேரிஸ் ச.ச நிலைய அணி மோதும். (ஐ)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகும்

இன்றைய ஆட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியால அணியை எதிர்த்து வைதடி நவீல்ட் பாடசாலை அணி மோதும். (ஐ-117)

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் —

★ 3.30 மணி:- அம்பாள் சுன்னாகம் எதிர் தையிட்டி உதயசூரியன்

★ 4.30 :- மணி மயிலிட்டி ஒற்றுமை எதிர் அராலி சரஸ்வதி

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் தென்மராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் —

★ 3.00 மணி :-நுணாவில் பாரதி எதிர் கலைவாணி

★ 4.00 மணி :- இலக்கியன் எதிர் ஐக்கிரன்

நெல்லியடி ம.ம வி. மைதானத்தில் நடைபெறும் வடமராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்

★ 3.30 மணி:- கோல்ட்ஸ்ரார் எதிர் நவசக்தி

★ 4. 30 மணி:- உதயதாரகை எதிர் டயமன்ட்ஸ்

காரைநகர் படையினர் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 27 நேற்று முன்தினம் இரவும் அதிகாலையும் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து கரைபோய் பகுதியின் மீது ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பொன்னாலை: திருவடிநிலை, மூளாய் பகுதிகளை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டது. (ஐ-13-15)

மீண்டும் செப்ரிசீமியா மரணங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27 செப்ரிசீமியா ஏற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இருவர் மரணமடைந்தனர்.

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருஞானரதினம் அன்ஜெயன் (வயது 17), புலோலி தெற்கைச் சேர்ந்த கப்பிரமணியம்மலராதேவி(வயது35) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். [ஐ-13-15

சமூகசேவை உத்தியோகத்தர் பரீட்சை

சமூகசேவை உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளுக்கான போட்டிப் பரீட்சை அடுத்தமாதம் 9ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகளை அந்தந்த பிரதேச செயலர் அலுவலகங்களில் நாளை மறுதினம் வியாழக் கிழமை பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்தியை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ஐ-4)

பண்டிதமணி

நினைவுப் பேருரை

28 – 06 – 1995 புதன்கிழமை
பிற்பகல் 3-00 மணிக்கு
யாழ். பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கில்

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்
தலைமையில் இடம்பெறும்

"சைவசமய மரபில் ஆகமங்கள்"
என்னும் பொருளில்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
அவர்கள்

நினைவுப் பேருரை வழங்குவார்.
அன்பர்கள், அறிஞர்கள், ஆர்வலர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

– அறங்காவற்குழு.

திருநெல்வேலி. (37253)

மரண அறிவித்தல்

கந்தையா நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற தொழிற்சாலை அதிபர், மடுல்கலை)

அளவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், நற்பொழுது ஹட்டனில் வசித்து வந்தவருமான கந்தையா நாகலிங்கம் நேற்று 26 – 06 – 95 இல் ஹட்டனில் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ராதாலிங்கம் (கொழும்பு), விசுவலிங்கம் [கனடா], சாரதாதேவி (கனடா), பூமாதேவி, ரேணுகாதேவி (ஆசிரியை நோர்வூட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காளஞ்சென்றவர்களான இராமநாதன், வைத்திலிங்கம், பருவதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனவதி, சோதாம்பிகை, ஆனந்தசிவன் [கனடா], சேகர் (நோர்வூட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மதா, கணந்தினி, கௌசியா, லத்தீசன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஹட்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. நாகலிங்கம்
[மனைவி]

"வேல் – இல்",
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (37256)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 – 06 – 1995 இல் அச்சிடப் பெறலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org